# உடன்பிறப்பே... 15

**தி.மு.க என்பது எதிரிகளால் அழிக்கமுடியாத இரும்புக்கோட்டை. இந்தக் கோட்டையை கட்டியெழுப்பி இயக்க வரலாற்றில் இடம்பிடித்த தீரர்கள் சிலரை, வாரா வாரம் இங்கு நினைவுகூர்ந்து வருகிறோம். அந்தவகையில் இந்த வாரம், பெரியார்-அண்ணா-கலைஞருடன் பயணித்து கழகம் வளர்த்த கோவை மு.ராமநாதன் அவர்களைப் பற்றிப் பார்ப்போம்.**

# கோவை மு.ராமநாதன்
# திராவிட இயக்க வாரியார்

*1964*-ஆம் ஆண்டு, இந்தி ஆட்சிமொழி சட்ட நகல் எரிப்புப் போராட்டம். பேரறிஞர் அண்ணாவிடம் பெயர் கொடுத்தவர்கள் பட்டியல்படி, கோவை ஒப்பணக்கார வீதியில் ஓர் இளைஞரை மாலையிட்டு வழி அனுப்புகின்றனர் கழகத் தொண்டர்கள். கையில் கழகக் கொடியுடன், மனதில் யாருக்கும் அஞ்சா துணிச்சலுடன்



ஓவியம் : ரவி பேலட்

அந்த இளைஞர், நகராட்சி அலுவலகம் முன் நின்று தன்னந்தனி ஆளாக சட்ட நகலைத் தீயிட்டுக் கொளுத்துகிறார். கைது, சிறை, கடுங்காவல் என எதற்கும் அஞ்சாமல் களம் கண்ட அந்த மாவீரன்தான் கோவை மு.ராமநாதன்.

கழக மேடைகளில், கொள்கை முழக்கத்தில் அவரை 'கோவைத் தென்றல்' என்பார்கள். ஆனால், போராட்டக் களத்திலோ நெருப்பாக நிற்கும் பேராற்றல் கொண்டவர் அவர். கழகம் கண்ட அத்தனைப் போராட்டங்களுக்கும் அஞ்சாது முன் நின்ற சிறைப்பறவை. அவரது இன்னொரு முகம், திராவிட இயக்கத்தின் பல்கலைக்கழகம். இப்படி வாழ்க்கை ஏடுகள் முழுவதும் கழகத்தின் பெயர் மட்டுமே தாங்கி நின்ற கொள்கைத் தங்கம், சுருக்கமாகச் சொன்னால் மு.ரா.

## கொங்கு தி.மு.க.வின் முகம்

கோயம்புத்தூரின் கீரைக்கார வீதியில், வே.முத்து - தாயம்மாள் ஆகியோருக்கு 1932-ஆம் ஆண்டில் பிறந்தார் ராமநாதன். உயர்நிலைப் பள்ளியில் தமிழ் மன்றத் தலைவராகச் செயல்பட்ட அவர், தனது 16-வது வயதில் பொது வாழ்க்கையில் அடியெடுத்து வைத்தார்.

1949-ஆம் ஆண்டில் கழகத்தின் உறுப்பினர் அட்டை வாங்கிய ராமநாதன், பின்னர் படிப்படியாக கட்சியின் பல பொறுப்புகளை ஏற்றுக்கொண்டார். கழகத்தின் ஆரம்ப காலப் பிரிவுகள், சோதனைகளில் அண்ணாவுடனும் கலைஞருடனும் கொள்கைப் பற்றுறுதியுடன் சோதனைகளைக் கடந்து கழகத்தைக் கட்டிக்காத்த கொங்கு மண்டலத்தின் அடையாளம் அவர்.

## 27 முறை சிறை

கைதும், சிறை அனுபவங்களும்தான் கழகத்தின் நெஞ்சுரம் மிக்க தலைவர்களை உருவாக்கியது என்றால், அதில் மு.ரா. பெயர் முதலில் இருக்கும்.

ஆரம்பத்தில், திராவிடர் கழகத் தொடர்புகளோடு இருந்த அவர், 1948-ஆம் ஆண்டு ஒரு வழக்கு தொடர்பாக சாட்சிக் கூண்டில் ஏறினார். அப்போது 'சத்தியமாகச் சொல்கிறேன்' எனக் கூறுவதற்குப் பதிலாக, 'மனப்பூர்வமாக' என்றார். அதற்காக நீதிமன்ற அவமதிப்பு என ஆறு வாரங்கள் சிறைதண்டனை பெற்றார். அங்கிருந்து அவரது சிறைவாழ்க்கை தொடங்குகிறது. அதன் பிறகு, சென்னை, கோவை, திருச்சி, மதுரை, பாளையங்கோட்டை என தமிழ்நாட்டின் அத்தனை மத்திய சிறைச்சாலை ஏடுகளிலும் அவர் பெயர் ஏறியது.

1953-ஆம் ஆண்டில் மும்முனைப் போராட்டத்தில் 3 மாதம் சிறை, 1962-ஆம் ஆண்டில் விலைவாசி உயர்வுப் போராட்டத்தில் 4 மாதம் சிறை, 1963-ஆம் ஆண்டில் 144 தடை மீறலுக்கு 2 மாதம் சிறை, 1964-ஆம் ஆண்டில் மொழிப்போரில் ஓர் ஆண்டுக் கடுங்காவல், 1965-ஆம் ஆண்டில் நாஸ் தியேட்டர் சதி வழக்கில் முதலில் 3 மாதம், பிறகு 10 மாதம் கடுங்காவல், 1976-ஆம் ஆண்டில் மிசா சிறை 14 மாதம், 1977 கருப்புக் கொடி காட்டும் போராட்டத்தால் 2 ஆண்டு கடுங்காவல், 1991-ஆம் ஆண்டில் ஆட்சிக் கலைப்பைக் கண்டித்துப் போராட்டம் நடத்தியதால், 3 மாதம் சிறை, இது தவிர மூன்று மாதங்களுக்குக் கீழ் பலமுறை சிறைவாழ்க்கை என 27 முறை சிறைக்கதவுகள் இவரை வரவேற்றுள்ளன.

மொழிப்போரில் சிறையில் இருந்து விடுதலையானபோது, அண்ணா ஆரத் தழுவி வரவேற்றார். அதுபோலவே, தன் தம்பி சிறையில் இருக்கிறான் என மூன்று முறை கலைஞர் நேரில் வந்து பார்த்த நிகழ்வுகள், நெஞ்சம் கனக்கச் செய்பவை.



## போராட்டமும் திருமணமும்

1964-ஆம் ஆண்டில் மொழிப் போர் போராட்டத்துக்குப் பெயர் கொடுத்தது தெரியாமல் குடும்பத்தினர், இவருக்குப் பெண் பார்த்து நிச்சயம் செய்துவிட்டனர். மாப்பிள்ளை, போராட்டத்தில் கலந்து கொள்ளப் போகிறார் என்றதும், பெண் வீட்டில் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

போராட்டம், கைது, சிறை என 9 மாதங்களுக்குப் பின்னர் 1965-ஆம் ஆண்டு பிப்ரவரி 25-ஆம் தேதி திருமணம் நடை பெற்றது. அடுத்த மூன்றாம் நாளே, நாஸ் தியேட்டரைக் கொளுத்தியதாக சதி வழக்கில் சிறை சென்றார். புரட்சிகரமான காலகட்டங்களில் எழுச்சி கொண்ட இளைஞர்கள் எப்படி இருப்பார்கள் என்பதற்கு மு.ரா. இவ்வாறாக எடுத்துக்காட்டாக இருந்தார்.

## மேடைகளே வகுப்பறைகள்

கோவை.மு.ரா. பேசுகிறார் என்றால், அந்த மேடை, நகைச்சுவையால் நிரம்பும். ஆன்மிகப் பேச்சாளர்கள்கூட அவர் போல பக்தி இலக்கியங்களைப் பேச முடியாது. பக்திப் பாசுரங்களை அப்படியே பேசிக்கொண்டே, அதில் நாத்திகக் கருத்துகளை சடாரென நுழைப்பது அவரது பாணியாக இருந்தது. பார்வையாளர்கள் அந்த இடத்தில் இருந்து அப்படியே அவரது கொள்கைச் சாரலில் நனையத் தொடங்குவர்.

மேடைகளில் நான்கு மணி நேரத்துக்கு மேல், கேட்பவர்கள் சோர்வடையாமல் பேசுவதில் வல்லவர். அவரது பேச்சுக்கலையை வெகுவாக ரசித்தவர் கலைஞர். இதனால் **'திராவிட இயக்கத்தின் வாரியார்'** எனப் போற்றப்பட்டார்.

**70 ஆண்டு காலம் கழகமே தனது உடலும் உயிரும் என இயங்கிய முன்னோடி கோவை மு.ராமநாதனின் பெயர், கழகத்தின் ரத்தநாளங்களில் ஒன்றாக என்றும் நிலைத்திருக்கும்.**

## கட்சி, அரசுப் பொறுப்புகள்

கொங்கு மண்டலத்தில், கழகத் தொண்டர்களை அரவணைத்துச் சென்ற வலிமைமிக்க இந்தக் களவீரர்தான், கோவையில், கழகத்துக்கான கட்டமைப்புகளை உருவாக்கியவர்.

1971-ஆம் ஆண்டு முதல் 76-ஆம் ஆண்டு வரை சட்ட மேலவை உறுப்பினராக இருந்தார். 1984-ஆம் ஆண்டில் சட்டமன்ற உறுப்பினராக, இந்தித் திணிப்பை எதிர்த்து சட்டநகலைக் கொளுத்தியதால், அவையில் இருந்து நீக்கம் செய்யப்பட்ட 10 பேரில் ராமநாதனும் ஒருவர். பின்னர் 1989-ஆம் ஆண்டில் கோவை மேற்கு தொகுதியில் மீண்டும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்வானார். 1996-ஆம் ஆண்டு கோவை தொகுதி நாடாளுமன்ற உறுப்பினராக அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

கோவை மாநகர மாவட்டச் செயலாளர், தணிக்கைக் குழு, சொத்துப் பாதுகாப்புக் குழு, அறக்கட்டளை அறங்காவலர், உயர்நிலை செயல்திட்டக்குழு, சட்டதிட்ட திருத்தக் குழு போன்ற பல குழுக்களில் பொறுப்புகளை வகித்தவர். 1992-ஆம் ஆண்டு கழகத்தின் **'அண்ணா விருது'** மு.ரா.வுக்கு அளிக்கப்பட்டது.


## இறுதி மரியாதை

கழக மேடைகளைக் கொள்கை வகுப்பறைகளாக மாற்றியமைத்த இந்த மூத்த தொண்டர், 2019-ஆம் ஆண்டு மே 9-ஆம் தேதி தனது 87 வயதில் உடல்நலக்குறைவால் காலமானார். கழகத்தின் கொடி அரைக் கம்பத்தில் பறந்தது. நிகழ்ச்சிகள் அனைத்தும் 3 நாட்களுக்கு ரத்து செய்யப்பட்டு அவரது உழைப்புக்குக் கழகம் மரியாதை செய்து வழி அனுப்பியது.

'துயரம்' எனும் மகா சமுத்திரத்தில், திசை காண முடியாமல் மூழ்கியிருக்கிறேன்' என இரங்கல் தெரிவித்தார் கழகத் தலைவர். 70 ஆண்டு காலம் கழகமே தனது உடலும் உயிரும் என இயங்கிய முன்னோடி கோவை மு.ராமநாதனின் பெயர், கழகத்தின் ரத்தநாளங்களில் ஒன்றாக என்றும் நிலைத்திருக்கும்.

...துடிக்கும்

## இந்தியாவைக் காக்க...




கடந்த ஒன்பது ஆண்டு கால பா.ஜ.க. ஆட்சியில் இந்தியா சந்தித்து வரும் கொடூரங்களைத் தரவுகளுடன் பேசுகிறது 'The crooked timber on new India' என்ற புத்தகம். ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனின் கணவர் பரகல பிரபாகர் எழுதிய இந்த நூல் சமீபத்தில் வெளியாகி அனைவரது கவனத்தையும் பெற்றுள்ளது.

பா.ஜ.க.வின் போலி வாக்குறுதிகளைத் தோலுரிக்கும் அதே வேளையில், 75 ஆண்டு கால சுதந்திர இந்தியாவில் ஜனநாயகப் பெருமைகளை பா.ஜ.க. சிதைத்து வருவதை யும், அதிலிருந்து மீள முடியாத நிலைக்கு இந்தியா செல்வதையும் இந்த நூல் எச்சரிக்கை செய்கிறது.

2024- மக்களவைத் தேர்தலுக்கு 'இந்தியா' தயாராகிக் கொண்டிருக்கிறது. இப்படியான சூழலில் இதுபோன்ற புத்தகங்களின் கருத்துகள் மக்களிடம் கொண்டு செல்லப்பட வேண்டும். அதன் அடிப்படையில், திராவிட வல்லுநர் மன்றத்தின் (DPF) ஒருங்கிணைப்பில், ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் வரும் 22-ஆம் தேதி (சனிக்கிழமை) மாலை 5.30 மணி அளவில் இந்த நூல் குறித்த கலந்துரையாடல் நிகழ்வு நடைபெற உள்ளது. நூல் ஆசிரியர் பரகல பிரபாகர், பத்திரிகையாளர் 'இந்து' என்.ராம் அவர்களுடன் கலந்துரையாடல் மேற்கொள்ள இருக்கிறார். மதவாதம், சாதியவாதம், இனவாதம், பெண்களுக்கு எதிரான அடிப்படைவாதம் என அனைத்தும் தலைவிரித்தாடும் பா.ஜ.க.வின் பாசிசத்தை அறிவாயுதம் ஏந்தி எதிர்கொள்ளத் தயாராவோம்.

## :ப்ளாஷ்பேக்



### இரண்டு முறை புகைப்படம்!



முருகானந்தம்

1996-ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு முன் மதுரை மாவட்ட கழகம் சார்பில் நிதி வசூல் செய்யப்பட்டது. அப்போது மேலூர் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளராக பணியாற்றிய நான், அதிக அளவில் தேர்தல் நிதி வசூல் செய்து கொடுத்தேன். அதற்காக தலைவர் கலைஞர் அவர்கள், எனக்குக் கைக்கடிகாரம் பரிசளித்தார்கள். எனது 23 வயதில் தலைவரை நேரில் பார்த்ததும் உற்சாகம் கொண்டேன். 'எந்த அணி?' என கேட்டார். 'இளைஞர் அணி' என்றேன். 'சரி நல்லா பணியாற்றணும்' என ஊக்கமளித்தார். அப்போது முதலில் எடுத்த புகைப்படம் போக, இன்னும் ஒரு புகைப்படம் எடுக்க வேண்டும் என்று புகைப்படக்காரர் டி.எஸ்.மணியன் அவர்களிடம் நான் கேட்க, தலைவர் அவர்கள் புன்முறுவலுடன் இசைவு கொடுத்தார்.

**-அ.முருகானந்தம், மாவட்ட துணை அமைப்பாளர்.**
**தி.மு.க. இலக்கிய அணி, மேலூர், மதுரை வடக்கு மாவட்டம்**


இது போன்ற அரிய புகைப் படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### முதல் மாநாட்டில் கலைஞர்!

**1951-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம், கழகத்தின் 'முதல் மாநில மாநாடு' நான்கு நாட்களுக்கு நடைபெற்றது. அதற்கு முன்னர் மாவட்டம்தோறும் பன்னிரண்டு மாநாடுகளை நடத்தி முடித்த பின்னர், சென்னையில் மாநில மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவர் என்.வி.நடராசன். அந்த மாநாட்டில் கலைஞர் எழுதி நடித்த 'இளைஞன் குரல்' நாடகம் நடைபெற்றது. அப்போது கலைஞருக்கு வயது 27.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 186




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131